| | |
|---|---|
| மையம் : ____________________<br><br>மேற்பார்வையாளர்<br>கையொப்பம்: ____________________ | பெயர்: ____________________<br><br>பதிவு எண்: ____________________<br><br>நாள் : ____________________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – ஜனவரி–பிப்ரவரி 2021**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**

Time : 1.30 hrs. Total Marks : 50

**பகுதி – 1**

I. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following text and answer the questions given below in a single line.

**(5x1=5)**

கணிப்பொறி நினைவகம் பல்லாயிரக்கணக்கான நுண்ணறைகளைக் கொண்டுள்ளது. இந்த நுண்ணறைகள் நேர் அணுகு நினைவகமாக நிறுவப்பட்டுள்ளன. ஒரு நுண்ணறையில் ஒரு நுண்மியைத் தேக்கி வைக்கலாம் ஒரு நுண்மியின் மதிப்பு '0' அல்லது '1' ஆக இருக்கும். இந்தவகை நினைவகம் தன்னுள் தேக்கி வைக்கப்பட்டுள்ள நுண்மியின் மதிப்பை 'மின்திறன்' உள்ள வரையில்தான் சேமித்து வைத்திருக்கும் மின்திறன் நிறுத்தப்பட்டவுடன் நுண்மியின் மதிப்பு மறைந்துவிடும்.

**வினாக்கள் :**

1. கணிப்பொறியின் நினைவகம் எவ்வளவு நுண்ணறைகளைக் கொண்டுள்ளது?

______________________________________________

2. ஒரு நுண்ணறையில் எத்தனை நுண்மியைத் தேக்கி வைக்கலாம்?

3. ஒரு நுண்மியின் மதிப்பு எவ்வளவாக இருக்கும்?

4. நினைவகம் தன்னுள் தேக்கி வைக்கப்பட்டுள்ள நுண்மியின் மதிப்பை எதுவரையில் சேமித்து வைத்திருக்கும்?

5. நுண்மியின் மதிப்பு எப்போது மறைந்துவிடும்?

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

பொங்கு கனங்குழை மண்டிய கெண்டை புரண்டு
புரண்டாடக் – குழல்
மங்குலில் வண்டு கலைந்ததுகண்டு மதன்சிலை
வண்டோட – இனி
இங்கிது கண்டுல கென்படு மென்படு மென்றிடை
திண்டாட – மலர்ப்
பங்கய மங்கை வசந்த சவுந்தரி
பந்து – பயின்றனளே!

**வினாக்கள்**

1. வசந்த சவுந்தரி அவளின் காதுகளில் அணிந்து இருந்த அணிகள் எவை?

2. அவளுடைய கண்கள் இங்கும் அங்கும் அசைவது எதற்கு உவமையாக கூறப்பட்டது?

3. அவளின் கூந்தலில் இருந்த மலர்களில் அமந்திருந்த வண்டுகள் ஏன் கலைந்து சென்றன?

4. இவ்வண்டுகளைக் கண்டு மதன்சிலை வண்டுகள் என்ன செய்தன?

5. வசந்த சவுந்தரி பயின்றது என்ன?

III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.

Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. விருந்து

2. வளம்

3. வீரர்கள்

4. புலவர்

5. தூய்மை

**IV. பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. 'ஞாலம் கருதினும் கைகூடும்' எப்போது?
2. ஆடுகளை மேய்த்து வந்த இடைக்குலச் சிறுவன் செய்தது என்ன?
3. வசந்த சவுந்தரி பந்து பயின்ற அழகினை விளக்கி எழுதுக.
4. எழில் பள்ளிக்கூடத்துப் பையனாக இருந்தபோது எவ்வாறு இருந்தான்?
5. நேர்காணல் என்றால் என்ன?
6. தாம் தொடங்கிய செயலை முடிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்துபவரின் இயல்பு எப்படி இருக்கும் என்று குமரகுருபரர் கூறுகிறார்?
7. அதிசூரன், ஏனாதி நாதரின் மீது பொறாமை கொண்டது ஏன்?
8. 'வினைமுற்று'– விளக்கி எடுத்துக்காட்டு தருக.
9. ஆறாம் வேற்றுமையின் உருபுகளைக் கூறி உதாரணம் தருக.
10. எண் எத்தனை வகைப்படும்? அவை யாவை? உதாரணம் தருக.

**V. பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**

Write a letter on any one of the given subjects. **(1x10=10)**

1. கொரோனா வைரஸ் தொற்றாமல் உன்னை எவ்வாறு பாதுகாத்துக்கொண்டாய் என்பது பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
2. நீ விரும்பி படித்த நூலினைக் குறித்து உன் மாமாவிற்கு ஒரு கடிதம் வரைக.
3. உன் ஊரில் நடைபெற இருக்கும் கபடி விளையாட்டுப் போட்டியினைக் கண்டு மகிழவதற்கு உன் நண்பனை அழைக்க ஒரு கடிதம் வரைக.